# 4

# விலைகள், கூலிகள், தொழில்நிலை மற்றும் உற்பத்தித்திறன்

*தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தின் நியதிகளில் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்திலிருந்து 2019 செத்தெம்பரில் நடுஒற்றை இலக்க மட்டத்தை அடைந்திருந்தது. இதேவேளை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான மையப் பணவீக்கம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிலையாக ஆனால் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. உணவு வகையானது தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைக்கு ஒத்தவாறு அசைவடைந்திருந்ததுடன் 2019 மாச்சு வரையில் ஒரு குறைவினையும் அதன் பின்னர் அதிகரிப்பினையும் காண்பித்திருந்தது. வீட்டு வாடகையில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்களவு மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாக சனவரியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பிற்கு மேலதிகமாக, எரிபொருள் விலைகள் மற்றும் கல்விசார் கட்டணங்கள் என்பவற்றின் அதிகரிப்புக்கள் உதவியுடன் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் படிப்படியாக அதிகரித்திருந்தது. கம்பனித் துறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் சிறப்பாக முகாமைப்படுத்தப்பட்டது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முறைசார் மற்றும் முறைசாரா துறைகளிலும் பெயரளவு கூலிகள் அதிகரித்திருந்தது. பொதுத் துறையில் கூலிகளின் நியதிகளில் அடிப்படைச் சம்பளத்திலான சிறப்புக் கொடுப்பனவுகள் மற்றும் உள்ளார்ந்த கொடுப்பனவுகளின் உட்சேர்ப்பு, 2019 யூலை 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத மாதாந்த உள்ளார்ந்த கொடுப்பனவுகள் என்பனவற்றின் பங்களிப்பினால் பொதுத் துறைக்கூலிகள் அதிகரித்திருந்தது. ஒட்டுமொத்தமாக, பெயரளவு கூலிகளில் அதிகரிப்பு இருந்தபோதிலும், பொதுத் துறையில் உண்மைக் கூலியானது குறைந்தளவு அவதானிக்கப்பட்டிருந்த அதேவேளை, முறைசாரா துறையில் மட்டும் சாத்தியமானதொரு உண்மைக் கூலி வளர்ச்சியொன்று அவதானிக்கபட்டது. 2019இன் முதலரையாண்டுக் காலப்பகுதியில், தொழிலின்மை வீதமானது அதிகரித்திருந்த வேளையில், இளைஞர், பெண்கள் மற்றும் உயர்ந்த கல்வித் தகைமை கொண்டிருந்த ஆளணியினர் மத்தியில் தொழிலின்மை வீதமானது உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இதேவேளை, தொழிற்படை மற்றும் தொழில்சார் வயதினரின் குடித்தொகை ஆகிய இரண்டிலுமான அதிகரிப்பின் காரணமாக 2019ஆம் ஆண்டின் முதலரையாண்டில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தொழிற்படை பங்கேற்பு வீதம் அதிகரித்திருந்தது. தொழில் நிபுணத்துவர்கள் விடயத்தினைத் தவிர ஏனைய அனைத்து தொழில் மட்டங்களிலுமான வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான வெளிச்செல்கைகள் குறைவடைந்திருந்தன.*

4

## 2019ஆம் ஆண்டின் அபிவிருத்திகள்

### விலைகள்

### பொது விலை மட்டத்தின் அசைவுகள்

- **பொது விலை மட்டம் 2019 சனவரியில் அதிகரித்திருந்ததுடன் மாச்சு வரையான காலப்பகுதியில் குறைவடைந்த போக்கினைக் காண்பித்து அதன் பின்னா் அதிகரித்திருந்தது.** பொது விலை மட்டத்தை அளவிடுகின்ற தேசிய நுகா்வோா் விலைச் சுட்டெண் (தேநுவிசு, 2013=100) மற்றும் கொழும்பு நுகா்வோா் விலைச் சுட்டெண் (கொநுவிசு, 2013=100)[1] ஆகிய இரண்டு நுகா்வு விலைச்சுட்டெண்களும் 2019 சனவரி மாதம் தவிர ஏனைய மாதங்களில் உணவு வகைப் பொருட்களின் விலைகளின் போக்கிற்கு ஒத்திசைவாக அசைந்திருந்தன. உணவு வகையானது கலப்பு அசைவினை காண்பித்திருந்த வேளையில் கரிசனைக்குரிய காலப்பகுதியில் உணவல்லா வகையானது தொடர்ச்சியாக அதிகரித்த போக்கினைப் பதிவுசெய்திருந்தது.

- **2019 முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில், தளம்பலடையும் உணவுப் பொருட்களின்[2] போக்கிற்கு ஒத்தவிதத்தில் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அசைவு காணப்பட்டதுடன், இது 2019 மாச்சு வரை குறைவடையும் போக்கினையும் அதன் பின்னா் ஒரு அதிகரித்த போக்கினையும் காண்பித்திருந்தது.** ஆண்டின் முதல் காலாண்டுப்பகுதியில் காணப்பட்ட தளம்பலடையும் உணவுப் பொருட்களின் விலைகளிலான குறைவானது பிரதானமாக அரிசி மற்றும் உருளைக்கிழங்குகளின் விலைகளின் இடையிடையிலான குறைவுகளோடு மரக்கறிகள், தேங்காய்கள் மற்றும் வெங்காயங்கள் போன்ற பொருட்களிலான விலைகளின் குறைவினாலேயே ஏற்பட்டதாகும். இதேவேளையில், ஆண்டின் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் காணப்பட்ட தளம்பலடையும் உணவுப் பொருட்களிலான விலைகளின் அதிகரிப்பானது பிரதானமாக அவ்வப்போது சின்ன வெங்காயங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் மரக்கறி, உருளைக்கிழங்கு, உடன் மீன் மற்றும் பெரிய வெங்காயம் என்பனவற்றின் விலைகளிலான அதிகரிப்பும் பங்களித்திருந்தது. இந்த அதிகரித்த போக்கானது மூன்றாவது காலாண்டுப்பகுதியில் தொடா்ந்திருந்ததுடன் இதற்கு உடன் மீன், பழங்கள், மற்றும் பெரிய வெங்காயத்தின் விலைகளிலான அதிகரிப்புக்கள் பங்களித்திருந்தன. தளம்பலடையும் உணவு வகையினுள், சாதகமான காலநிலை நிலைமைகளின் விளைவினால் ஏற்பட்ட 2018/2019இன் பெரும்போக பருவ காலத்தில் உயர்ந்தளவிலான நெல் உற்பத்தி காரணமாக 2019இன் ஏழு மாத காலப்பகுதியில் அரிசி வகைகளின் விலைகள் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் மூன்றாவது காலாண்டுப் பகுதியின் இறுதியில் சாதகமற்ற காலநிலை காரணமாக வழங்கல் பக்க இடையூறுகளின் காரணமாக அரிசி வகைகளின் விலைகள் அதிகரித்திருந்தது. அதேவேளையில், சாதகமான காலநிலை நிலைமைகளின் விளைவினால் ஏற்பட்ட தேங்காய் உற்பத்தியிலான மீட்சியின் காரணமாக தேங்காய் விலைகள் 2016 இலிருந்தான தாழ்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவு செய்திருந்தது. கரிசனைக்குரிய காலப்பகுதியில் உருளைக் கிழங்குகள் மற்றும் வெங்காயங்களின் விலைகள் ஒரு ஒட்டுமொத்த அதிகரிப்பினைப் பதிவுசெய்திருந்த வேளையில், இதற்கு உருளைக்கிழங்குகள் மற்றும் வெங்காயங்களின் இறக்குமதித் தீா்வையானது முறையே 2019 பெப்புரவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கிலோ கிறாமிற்கு ரூ.30 மற்றும் 2019 மே 22ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் ரூ.20 இனாலும் அதிகரிக்கப்பட்டிருந்தமை பகுதியளவில் ஆதரித்திருந்தது. எவ்வாறாயினும், செத்தெம்பரில் அவதானிக்கப்பட்ட அதிகரித்த பெரிய வெங்காயத்தின் விலைகளிலிருந்து நுகா்வோரினைப் பாதுகாக்கும் பொருட்டு 2019 ஒத்தோபா் 03ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பெரிய வெங்காயம் மீதான இறக்குமதித் தீா்வை கிலோ கிறாமிற்கு ரூ.39இனால் கீழ் நோக்கித் திருத்தம் செய்யப்பட்டது. இதேவேளையில், கரிசனைக்குரிய காலப்பகுதியில் உடன் மீன் விலைகள் ஒரு ஒட்டுமொத்த அதிகரித்த போக்கினை குறித்துக் காட்டியிருந்த வேளையில், சில மாதங்களில் ஏற்பட்ட பிரதானமான விலை அதிகரிப்பிற்கு சாதகமற்ற காலநிலை நிலைமைகளின் விளைவினால் ஏற்பட்ட வழங்கல்பக்க இடையூறுகளே காரணமாக அமைந்தன.

- **2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உணவு வகையினுள் தளம்பலடையும் உணவுகள் தவிர்த்து ஏனைய பொருட்களின் விலைகள் ஒரு ஒட்டுமொத்த அதிகரிப்பினைக் காண்பித்திருந்தது.** உலக சந்தையில் விலை அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு ஒரு வருடத்தின் பின்னா் 2019 மாச்சு 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 400 கிறாம் இறக்குமதிப் பால்மா பக்கற்றின் விலை ரூ.25இனால் அதிகரிக்கப்பட்டதுடன் அதனைத் தொடா்ந்து முறையே 2019 ஓகத்து 02ஆம் திகதியிலிருந்து

---

1 தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களமானது மாதாந்த அடிப்படையிலான தேசிய நுகா்வோா் விலைச் சுட்டெண் (தேநுவிசு, 2013 = 100) மற்றும் கொழும்பு நுகா்வோா் விலைச் சுட்டெண் (கொநுவிசு 2013 = 100) என்கிற அலுவல்சாா் நுகா்வோா் விலைச் சுட்டெண்ணைத் தொகுக்கின்றது. தேசிய நுகா்வோா் விலைச் சுட்டெண் தெரிவுசெய்யப்பட்ட நுகா்வோா் பொருட்களின் விலை அசைவுகளை தேசிய மட்டத்தில் பிரதிபலிப்பதோடு கொழும்பு நுகா்வோா் விலைச் சுட்டெண் கொழும்பு மாவட்டத்திலுள்ள நகா்புற வீட்டலகினைப் பிரதிபலித்திருந்தது.

2 தளம்பல்மிக்க உணவு வகைகள் அரிசி, இறைச்சி, புதிய மீன் மற்றும் கடலுணவு, தெங்கு, புதிய பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கறிச்சரக்குகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

மற்றும் 2019 செத்தெம்பர் 24ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் ரூ.5இனாலும் ரூ.20இனாலும் மேல்நோக்கிய இரண்டு விலைத் திருத்தங்கள் இறக்குமதிப் பால்மாவில் ஏற்பட்டது. இதேவேளையில், கரிசனைக்குரிய காலப்பகுதியில் பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலைகள் நிலைத்திருக்கக்கூடியதாகக் காணப்பட்டது. மேலும், கோதுமை மாவின் விலைகள் 2019 யூலை 16ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் கிலோ கிராமிற்கு ரூ.8இனால் மேல் நோக்கிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டதுடன், பாணின் விலை தொடர்ந்தும் மாற்றமடையாது காணப்பட்டது.

- **ஆண்டின் ஆரம்பத்தில் விரைவான அதிகரிப்பைப் பதிவுசெய்திருந்த உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் அதிகரித்திருந்தது.** இரண்டு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடையிலும் உணவல்லா வகையில் அதிகளவில் பங்கினைக் கொண்டிருக்கின்ற வீடமைப்பு, குடிநீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் துணை வகையானது ஒரு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைப் பதிவு செய்து 2019 சனவரியில் அவதானிக்கப்பட்ட முதன்மைப் பணவீக்கம் மற்றும் மையப் பணவீக்கம் என்பனவற்றின் சடுதியான அதிகரிப்பினை விளைவித்தமையினை குறித்துக்காட்டப்பட வேண்டியதாகும். மேலும், வீட்டு வாடகையில் 2015 சனவரியின் பின்னரான முதலாவது திருத்தமாகிய இக்குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தமானது 2019ஆம் ஆண்டு முழுவதும் பணவீக்கத்தின் மட்டத்தினை உயர்வான அளவிலே தொடர்ந்தும் வைத்திருந்தது. மேலும், 2018இல் அறிமுகப்படுத்தப்பட்ட விலையிடல் பொறிமுறையின் படி, உள்நாட்டு எரிபொருள் விலையானது பல்வேறு விலைத்திருத்தங்களுக்குட்பட்டதுடன் 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் ஒட்டுமொத்த அதிகரித்த போக்கினையும் பதிவுசெய்தது. ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் முதல் தர மற்றும் இரண்டாம் தர கல்விக்கான பிரத்தியேக வகுப்பிற்கான கட்டணங்களில் ஒரு அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து தனியார் மருத்துவப் பயிற்சிக்கான விலைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளின் விலைகளும் முறையே 2019 பெப்புருவரி மற்றும் மேயில் அதிகரித்திருந்தன. சிகரெட் மற்றும் வெறியக் குடிவகைகள் மீதான 2019ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் கீழான கலால் வரித் திருத்தங்களின் காரணமாக 2019 மாச்சில் சாராயம், பியர் மற்றும் சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரித்திருந்தன. பல்வேறுபட்ட தயாரிக்கப்பட்ட உணவுவகைகளின் விலைகள் மற்றும் கார்களுக்காகச் செலுத்தப்பட்ட காப்புறுதியும் கரிசனைக்குரிய காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. இதேவேளையில், செத்தெம்பரில் சர்வதேசப் பாடசாலைகளின் கட்டணங்களின் அதிகரிப்புக் காரணமாக கல்வித் துணைத் துறையில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், திரவப் பெற்றோலிய வாயுவின் விலையானது 2019 ஒத்தோபர் 05ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 12.5 கிலோ கிறாம் சிலிண்டர் ஒன்றிற்கு ரூ.240 இனால் கீழ் நோக்கி திருத்தம் செய்யப்பட்டது.

## நுகர்வோர் விலைச் சுட்டெண்


### தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்

- **தேசிய மட்டத்தில் நுகர்வோர் பொருட்கள் கூடையில் விலைப் போக்குகளை பிரதிபலிக்கின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களில் குறைவடைந்த போக்கினை காண்பித்ததுடன் அதன்பின்னர் 2019 செத்தெம்பர் வரை அதிகரித்திருந்தது.** 2019 சனவரியில், உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு காரணமாக தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 127.3 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்திருந்தது. அதன்பின்னர், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2019 மாச்சில் 126.4 சுட்டெண் புள்ளிகளுக்கு குறைவடைந்ததுடன் பின்னர் 2019 செத்தெம்பரில் 130.6 சுட்டெண் புள்ளிகளுக்கு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. பெப்புருவரி மற்றும் மாச்சு மாதங்களிலான மாதத்திற்கு மாத நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் குறைவிற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் குறைவடைந்தமை வகைகூறியதோடு அதன் பின்னர் 2019 செத்தெம்பர் வரையிலான அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைப் போக்குகளே பங்களித்திருந்தன.

4

வரைபடம் 4.1

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதத்திற்கு மாத % மாற்றத்திற்கான பங்களிப்பு (2013=100)




மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

### கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்

- **கொழும்பு மாவட்டத்தில் நகர்புற பிரதேச விலை அபிவிருத்தியை அளவிடுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2019 சனவரியில் 127.4 சுட்டெண் புள்ளிகளை பதிவுசெய்ததுடன் 2019 செத்தெம்பரில் 131.1 சுட்டெண் புள்ளிகளை அடைந்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் சனவரி மாதத்திலான அதிகரிப்பிற்கு உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலான போக்கு ஆதரவளித்ததுடன் அடுத்த இரண்டு மாதங்களுக்கும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அசைவினைப் பின்பற்றி குறைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் 2019 ஏப்பிறலிலிருந்து யூன் வரையிலான அவதானிக்கப்பட்ட மாதாந்த அளவிலான அதிகரிப்பிற்கு உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டிலுமுள்ள பொருட்களின் விலைகளின் அதிகரிப்புக்களே வகைகூறின. எவ்வாறாயினும், 2019 யூலையில் அவதானிக்கப்பட்ட குறைவிற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலான குறைவு மாத்திரமே பங்களித்திருந்தது. இதேவேளையில், ஓகத்து மாதத்தில் அவதானிக்கப்பட்ட மாதத்திற்கு மாத அதிகரிப்பிற்கு உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலான அதிகரிப்பு காரணமாக விளங்கியதுடன் 2019 செத்தெம்பரிற்கு உணவு மற்றும் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகளிலான அதிகரிப்புக்களே பங்களித்திருந்தன.


### முதன்மைப் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டிற்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது ஒட்டுமொத்தமாக ஒரு அதிகரித்த போக்கினை காண்பித்திருந்ததுடன் இது 2019இன் முதல் எட்டு மாதங்களில் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்திலிருந்து 2019 செத்தெம்பரில் நடு ஒற்றை இலக்க மட்டத்தை அடைந்தது.** முதல் ஏழு மாதங்களில் ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்திலான அசைவுகளினை தளத்திலான தாக்கம் பெரும்பாலும் தீர்மானித்திருந்ததுடன் சனவரியில் 1.2 சதவீதத்தினையும் 2019 செத்தெம்பரில் 5.0 கொண்ட உயர் சதவீதத்தினை அடைந்தது. இதற்குமேலதிகமாக, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுச் சராசரி பணவீக்கமானது கரிசனைக்குரிய காலப்பகுதியில் நிலையான மட்டத்தில் காணப்பட்டதுடன் 2019 சனவரியில் 1.8 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன் 2019 செத்தெம்பரில் 2.3 சதவீதத்தினை அடைந்தது.

- **கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2019 மே வரை அதிகரித்த போக்கினை காண்பித்ததுடன் 2019 யூலை வரை ஒரு குறைவடைந்த போக்கினை தொடர்ந்திருந்ததுடன் அதன்பின்னர் அதிகரித்திருந்தது.** கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கமானது 2019 சனவரியில் 3.7 சதவீதத்திலிருந்து 2019 மேயில் 5.0 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் அதன்பின்னர் 2019 யூலை வரை குறைவடைந்த போக்கினைக் காண்பித்து 3.3 சதவீதத்தினை அடைந்ததுடன் 2019 செத்தெம்பரில் 5.0 சதவீதத்தினை அடைந்தது. இதேவேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டுச் சராசரி பணவீக்கமானது 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் உறுதியடைந்திருந்ததுடன் 2019

வரைபடம் 4.2


தே.நு.வி.சு முதன்மைப் பணவீக்கத்தின் அசைவுகள் (2013=100)




*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 4.3

உற்பத்தியாளர் விலைப் பணவீக்கத்தின் அசைவுகள் (ஆண்டிற்கு ஆண்டு %)





*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

சனவரியில் அது 4.1 சதவீதத்தினைப் பதிவுசெய்ததுடன் மேயில் 4.2 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் அடுத்த மாதகாலப்பகுதியில் மாற்றமடையாது காணப்பட்டு 2019 செத்தெம்பரில் 3.9 சதவீதத்தினை அடைந்தது.

### மையப் பணவீக்கம்

- **தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் அளவிடப்படுகின்ற ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது உறுதியாகக் காணப்பட்டாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமாகக் காணப்பட்டது.** தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் அளவிடப்படுகின்ற ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கமானது உயர்ந்தளவு மட்டத்தில் காணப்பட்டமைக்கு வீட்டு வாடகைகள் மீதான மேல்நோக்கிய திருத்தத்தினால் விளைவிக்கப்பட்ட ஆண்டில் ஆரம்பத்திலான உயர்ச்சியினால் பிரதானமாக உந்தப்பட்டது. அதன்படி, மாதாந்த அதிகரிப்புடன் ஒன்றிணைந்து தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற மையப் பணவீக்கம் 2019 சனவரியில் 5.1 சதவீதத்திலிருந்து 2019 ஏப்பிறலிற்கு 6.3 சதவீதத்திற்கு உயர்வடைந்த போக்கிற்கு நகர்ந்திருந்த வேளையில் 2019 மேயில் மாற்றமடையாது காணப்பட்ட வேளையில் 2019 செத்தெம்பரில் 5.6 சதவீதத்தினை அடைந்தது. இதேவேளையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான மையப் பணவீக்கம் 2019 சனவரியில் 5.5 சதவீதத்தினையும் 2019 செத்தெம்பரில் 5.6 சதவீதத்தையும் பதிவுசெய்தது.

வரைபடம் 4.4
கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள்




*மூலங்கள்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்

- **உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் (உவிசு, 2013கா4=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் 2019இன் முதல் எட்டு மாதங்களில் ஒரு ஒட்டுமொத்த குறைவினை காண்பித்திருந்தது.** வேளாண்மை துணைத் துறையின் ஆண்டிற்கு ஆண்டு உற்பத்தியாளர் விலைப் பணவீக்கம் எதிர்மறையான வளர்ச்சி வீதத்தினை பதிவுசெய்ததுடன் தயாரிப்புத் துணைத் துறை ஒரு ஒட்டுமொத்த குறைவினை பிரதிபலித்திருந்த வேளையில், மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் துணைத் துறை கரிசனைக்குரிய காலப்பகுதியில் கலப்பு அசைவுகளுடன் ஒரு ஒட்டுமொத்த அதிகரிப்பினை விபரித்திருந்தது.

### பணவீக்க எதிர்பார்க்கைகள்

- **நிறுவனத் துறையில் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஒரு கலப்பு அசைவினை காண்பித்திருந்ததுடன் உத்தியோகபூர்வ விலைச் சுட்டெண்களினால் பிரதிபலிக்கப்பட்டவாறான உண்மையான பணவீக்கத்தின் நோக்குடன் ஒத்திசைவாகக் காணப்பட்டது.** எவ்வாறாயினும், கரிசனைக்குரிய காலப்பகுதியில் பணவீக்க எதிர்பார்க்கைகள் 3.5 சதவீதம் தொடக்கம் 5.0 சதவீதம் வரையான வீச்சினுள் நிலைத்திருந்தது. முன்னைய ஆண்டில் தேய்வடைந்த இலங்கை ரூபாவின் அடுக்கடுக்கான விளைவுகள் மற்றும் எரிபொருள் விலைகளிலான திருத்தங்கள் என்பன நிறுவனத் துறையின் பணவீக்க எதிர்பார்ப்புக்களில் செல்வாக்கு செலுத்தின. இதற்குமேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உந்தப்பட்ட நாட்டின் அரசியல் நிலையற்றதன்மையும் நிறுவனத் துறையின் எதிர்கால பணவீக்க எதிர்பார்க்கைகளைத் தூண்டுவித்தன. இதேவேளையில், பணவீக்க எதிர்பார்க்கைகள் மீதான விழிப்புணர்வு நிறுவனத் துறையினரை விட குறைவாக காணப்படும் வீட்டலகுத் துறைக்கான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் நிறுவனத் துறையினைவிட மேல்மட்டத்தில் காணப்பட்டது. சாதகமற்ற காலநிலை நிலைமைகளினால் விளைவிக்கப்பட்ட உள்நாட்டு வழங்கல்பக்க இடையூறுகள் மற்றும் நாட்டின் உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியின் குறைபாடு என்பன பணவீக்க எதிர்பார்க்கைகள் மீதான வீட்டலகுத் துறையின் பிரதான காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டன. மேலும், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் வரவிருக்கின்ற தேர்தல்கள் காரணமாக அரச செலவினத்திலான அதிகரிப்பு என்பன நிறுவன மற்றும் வீட்டலகுத் துறையின் எதிர்கால பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மீது தாக்கம் செலுத்திய தோற்றம் பெற்றுவரும் காரணிகளாக குறித்துக்காட்ட முடியும்.


### கூலிகள்

- **பொதுத் துறைக் கூலிவீதச் சுட்டெண்ணினால் (2012=100) அளவிடப்பட்டவாறான அரசாங்க ஊழியர்களின் பெயரளவு கூலியானது 2018இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் 2.0 சதவீதத்தினால் அதிகரித்தது.** இதற்கு அடிப்படைச் சம்பளத்தில் விசேட படி மற்றும் இடைப்படியினூடாக உட்சேர்க்கப்பட்ட ரூ.10,000 மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு 2019 யூலை 01 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியமற்ற மாதாந்த கிடைப்படி ரூ.2,500 காரணமாக அமைந்தன. புதிய இடைப்படியின் அறிமுகம் காரணமாக, பெயரளவு பொதுத் துறைக் கூலி வீதச்சுட்டெண் மாதத்திற்கு மாத அடிப்படையில் 2019 யூலையில் 5.0 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பொதுத் துறை ஊழியர்கள் 0.7 சதவீத உண்மைக்கூலி வீத குறைவினை அனுபவித்திருந்தனர். மேலும், பொதுத் துறை ஊழியருக்கான அடிப்படைச் சம்பளத்தில் விசேட படி மற்றும் இடைப்படி உள்ளடங்குகின்ற செயன்முறையின் இறுதித்திருத்தமானது 2020 சனவரியில் மேற்கொள்ளப்பட இருப்பதுடன் இது மாதத்திற்கு மாத அடிப்படையில் பொதுத் துறை கூலிவீதச் சுட்டெண்ணினை 4.9 சதவீதத்திற்கு அதிகரிக்கும்.

- **கூலி நிர்ணய சபையினால் நிருவகிக்கப்படுகின்ற ஊழியர்களின் கூலிகளின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண் (1978 திசெம்பர் = 100) மூலம் அளவிடப்பட்டவாறான முறைசார் தனியார் துறையின் ஊழியர்களின் பெயரளவு கூலிகள் 2018இன் முதல் எட்டு மாதப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இல் அதேகாலப்பகுதியில் 3.4 சதவீதத்தினை அதிகரித்திருந்தது.** இதற்கு 2018 ஓகத்தில் அச்சிடல், புடவை, ரயர் மற்றும் ரியூப் தயாரிப்பு மற்றும் ஆடைத் தயாரிப்பு, வர்த்தகம் என்பனவற்றில் 2019 பெப்புருவரியிலும் செங்கல் மற்றும் தரை ஓடு தயாரிப்பு, தேங்காய் உற்பத்தி, பின்னப்பட்ட உள்ளாடைத் தொகுதித் தயாரிப்பு, தீக்குச்சி தயாரிப்பு மற்றும் மோட்டார் போக்குவரத்து என்பனவற்றிலும் ஏற்பட்ட குறைந்தபட்ச கூலி அதிகரிப்புக் காரணமாக அமைந்தன. முறைசார் தனியார் துறையில் ஊழியர்களின் உண்மைக் கூலியானது 2018இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் 0.6 சதவீதத்தினால் குறைவடைந்தது. இதேவேளையில், 2019இன் ஆரம்பத்தில், பெருந்தோட்டத் துறையின் ஊழியர்கள் ரூ.1,000 குறைந்தளவு நாளாந்த கூலியினைக் கோரி ஆர்ப்பாட்டமொன்றினை ஆரம்பித்திருந்ததுடன் அதனைத் தொடர்ந்து அடிப்படை நாளாந்த கூலியானது ரூ.500 இலிருந்து ரூ.700 இற்கு அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், பெருந்தோட்டத் துறையின் ஊழியர்களின் வருகைதரும்படி மற்றும் உற்பத்தித்திறனின்படி என்பனவற்றின் நிறுத்துகை காரணமாக குறிப்பிட்ட மொத்தச் சம்பளம் 20 ரூபாவினால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

- **முறைசாரா தனியார் துறையில் கூலிவீதச் சுட்டெண்ணில் (2012=100) அளவிடப்பட்டவாறான முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவு கூலி வீதச் சுட்டெண் 2018இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ஒப்பிடுகையில் 2019இன் அதேகாலப்பகுதியில் 7.4 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.** வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் ஆகிய துணைத் துறைகளில் ஊழியர்களின் பெயரளவு கூலிகள் 2019இன் முதல் எட்டு மாதங்களில் முறையே 11.5 சதவீதம், 5.8 சதவீதம் மற்றும் 7.2 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இதேவேளையில், முறைசாரா தனியார் துறையின் உண்மைக்கூலிகள் 2018 முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2019 அதேகாலப்பகுதியில் 4.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

வரைபடம் 4.5
உண்மைக் கூலி வீதச் சுட்டெண்களின் ஆண்டுச் சராசரி மாற்றம்




மூலங்கள்: தொழில் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

### தொழிற்படை மற்றும் தொழில்நிலை

- **அதிகரித்துச் செல்லும் தொழிலின்மை வீதம் மற்றும் விடாப்பிடியான அமைப்பியல் பிரச்சனைகள் என்பனவற்றிற்கு மத்தியிலும், தொழில்வாய்ப்பில் காணப்படும் முன்னேற்றங்களின் காரணமாக தொழிற்சந்தைக் குறிகாட்டிகள் கலப்பான சமிக்ஞைகளைப் பிரதிபலித்தன.** 2019இன் முதலரைப்பகுதியில் தொழில்புரிகின்ற வயதினரின் குடித்தொகை முன்னைய ஆண்டுடன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளதுடன் இவ்வதிகரிப்பு முழுவதும்

4

பொருளாதார ரீதியில் செயற்படுகின்ற குடித்தொகை மூலமே பெறப்பட்டவேளையில் பொருளாதார ரீதியில் செயற்படாத குடித்தொகை இக்காலப்பகுதியில் வீழ்ச்சியையே காட்டியது. இதற்கமைய, 2019இன் முதலரைப்பகுதியில் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் 2018இன் இதேகாலப்பகுதியிலிருந்து அதிகரித்துக் காணப்பட்டது. தொழில்புரியும் குடித்தொகையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்ட போதும் மொத்த தொழிற்படையில் தொழிலின்மைக் குடித்தொகையின் பங்கான தொழிலின்மை வீதமும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் அதிகரித்தது. 2019இன் முதலரைப்பகுதியில் தொழிலின்மை வீதம், இளைஞரிடையேயும் கல்வித்தகைமை பெற்றவர்களிடையேயும் பெண்களிடையேயும் உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்ட போதும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன.

## தொழிற்படை

- **2019இன் முதலரைப்பகுதியில் தொழிற்படை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 260,261 ஆட்களினால் அதிகரித்தது.** தொழிற்படை, தொகைமதிப்பு புள்ளிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் காலாண்டு தொழிற்படை பங்கேற்பு அளவீடு, தொடர்பான காலப்பகுதியில், ஒன்றில் தொழிலிருந்த அல்லது தொழிலின்றியிருந்த 15 வயதினையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற குடித்தொகையினை உள்ளடக்குகின்றது. இதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் தொழிற்படை, முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியின் 8.343 மில்லியனிலிருந்து 8.603 மில்லியனுக்கு 3.1 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. தொழிற்படையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு மொத்த அதிகரிப்பில் 83 சதவீதத்திற்கு காரணமாயிருந்த கிராமியத் துறை முக்கிய தூண்டுதலாக இருந்த வேளையில், நகர மற்றும் பெருந்தோட்டத் துறைகளும் தொடர்பான காலப்பகுதியில் அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தன. பொதுவாக, 2019இன் முதலரைப்பகுதியில் ஆண் மற்றும் பெண் தொழிற்படைகள் இரண்டும் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. தொடர்பான காலப்பகுதியில் தொழிற்படையின் மொத்த அதிகரிப்பில் பெண்களின் தொழிற்படை 7.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து மொத்த அதிகரிப்பில் 77 சதவீதத்திற்கு பங்களித்தது. பெண்கள் தொழிற்படையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு கிராமிய மற்றும் நகரத் துறைகளில் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

- **தொழிலாற்றுகின்ற வயதுக் குடித்தொகைக்கான தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படைப் பங்கேற்பு விகிதம் 2018 முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 51.5 சதவீதத்திலிருந்து 2019இன் முதலரைப்பகுதியில் 52.6 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.** பெண்கள் தொழிற்படை பங்கேற்பு வீத நியதிகளில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது. இது, 2019இன் முதலரைப்பகுதியில் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 33.0 சதவீதத்திலிருந்து 34.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை, ஆண்களின் தொழிற்படை பங்கேற்பு வீதமும் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 73.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 73.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையிலான தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் காணப்பட்ட இடைவெளி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 40.0 சதவீதப் புள்ளியிலிருந்து 38.6 சதவீதப் புள்ளிக்கு மேம்பட்டது. தொடர்பான காலப்பகுதியில் 15 வயதிற்கும் 24 வயதிற்குமிடைப்பட்ட நபர்களை உள்ளடக்கிய இளைஞர்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் அதிகரித்தது.

4

அட்டவணை 4.1

தொழிற்படை, தொழில்நிலை மற்றும் தொழிலின்மை(அ)

| விடயம் | 2018 முதலாம் அரையாண்டு | 2018 ஆண்டு | 2019 முதலாம் அரையாண்டு | 2019 எறிவுகள் (வருடாந்தம்) |
|---|---|---|---|---|
| வீட்டலகுகளின் குடித்தொகை '000 (வயது 15 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலும்) | 16,191 | 16,196 | 16,363 | 16,446 |
| தொழிற்படை, '000 | 8,343 | 8,388 | 8,603 | 8,650 |
| தொழிலிலுள்ளோர், '000 | 7,966 | 8,015 | 8,193 | 8,235 |
| தொழிலற்றோர், '000 | 377 | 373 | 410 | 415 |
| தொழிற்படைப் பங்கேற்பு வீதம் (வீட்டலகுகளின் குடித்தொகையின் % ஆக) | 51.5 | 51.8 | 52.6 | 52.6 |
| தொழிலின்மை வீதம் (தொழிற்படையின் % ஆக) | 4.5 | 4.4 | 4.8 | 4.8 |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

4

### தொழில்நிலை

- **2019இன் முதலரைப்பகுதியில் தொழில்புரியும் குடித்தொகை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 227,238 ஆட்களினால் அதிகரித்தது.** இதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் தொழில்புரியும் குடித்தொகை 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 7.996 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 8.193 மில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. துறைவாரியான தொழில்நிலை நியதிகளில், 2019இன் முதலரைப்பகுதியில் மிகப்பெரும் தொழில் உருவாக்கத் துறையாக விளங்கும் பணிகள் துறை மொத்த தொழில்நிலையில் 47.3 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் துறைகள் மொத்தத் தொழில்நிலையில் முறையே 24.5 சதவீதத்திற்கும் 28.3 சதவீதத்திற்கும் பங்களித்தன. 2019இன் முதலரைப்பகுதியில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளிலுள்ள தொழில்நிலை 2018இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து அதிகரிப்பொன்றினைக் காட்டிய வேளையில், அண்மைய தொழில்நிலை அமைப்பின் போக்குகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தொடர்பான காலப்பகுதியில் வேளாண்மைத் துறை வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

- **தொழில்புரியும் குடித்தொகையில், சுய வேலைவாய்ப்பு வகை 2018இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.** தொழில்நிலை அந்தஸ்து நியதிகளில் தொழில்புரியும் குடித்தொகையினை இரண்டு முக்கிய வகைகளுக்குள் வகைப்படுத்த முடியும். அதாவது, கூலி மற்றும் சம்பளங்களைப் பெறும் தொழிலாளர்கள் (ஊழியர்கள்) மற்றையது சுயதொழில்புரிவோர். ஊழியர் வகையினை அரச துறை மற்றும் தனியார் துறை என மேலும் வகைப்படுத்த முடியும். அதேவேளை, சுயதொழில் புரியும் வகையினரை தொழில்தருநர்கள், சொந்தமாக தொழில் புரிபவர்கள் மற்றும் பங்களிக்கும் குடும்ப வேலையாட்கள் என வகைப்படுத்த முடியும். இவ்வகைகளிடையே அனைத்து வகைகளிலும் தொழில்புரியும் ஆட்களின் எண்ணிக்கை 2019 முதலரைப்பகுதியில் அதிகரித்தவிடத்து சொந்தமாகத் தொழில்புரியும் வேலையாட்களின் அதிகரிப்பு மொத்த அதிகரிப்பில் 50 சதவீதத்திற்குப் பங்களித்தது. தொழில்புரியும் குடித்தொகையினரில் இவர்களின் பங்கு நியதிகளில், சொந்தமாகத் தொழில்புரிபவர்களின் பங்கு அதிகரிக்க அரச துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. அதேவேளை, தொழில்தருநர்கள் மற்றும் குடும்பங்களுக்கு பங்களிக்கும் வேலையாட்களின் பங்கு இத்தொடர்பான காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

### தொழிலின்மை

- **தொடர்பான காலப்பகுதியில் தொழிலின்மைக் குடித்தொகை 33,023 ஆட்களினால் அதிகரித்தது.** 2019இன் முதலரைப்பகுதியில் தொழிலில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கையை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 376,984 உடன் ஒப்பிடுகையில் 410,007இற்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி, தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. தொழிலின்மைக் குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஆண்கள் பெருமளவிற்குக் காரணமாக இருந்ததுடன் ஆண்களின் தொழிலின்மை குடித்தொகை தொடர்பான காலப்பகுதியில் 15.3 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. இதன்படி, ஆண்களின் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 3.0 சதவீதத்திலிருந்து 2019இன் முதலரைப்பகுதியின் 3.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. தொழிலற்ற பெண்கள் குடித்தொகை இக்காலப்பகுதியில் 3.7 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், பெண்களின் தொழிற்படை உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமையினால் பெண்களின் தொழிலின்மை வீதம் முன்னயை ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீதத்திலிருந்து 2019இன் முதலரைப்பகுதியில் 7.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.

- **2019இன் முதலரைப்பகுதியில் வயது அடிப்படையிலான தொழிலின்மை வீதங்களுக்கிடையேயான சமமற்ற தன்மை கவனிக்கத்தக்கதொரு மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.** வயது அடிப்படையிலான தொழிலின்மை

வரைபடம் 4.7

ஒட்டுமொத்த தொழிலற்றோர் வீதம் (%)




*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 4.2

தொழிலின்மை வீதம் (%) - 2019 முதலரை

| வயது மற்றும் கல்வி மட்ட அடிப்படையில் | |
|---|---|
| **வயது (ஆண்டுகள்) அடிப்படையில்** | |
| 15-24 | 20.8 |
| 25-29 | 10.8 |
| 30-39 | 3.1 |
| 40+ | 1.1 |
| **கல்வி மட்ட அடிப்படையில்** | |
| ஆண்டு 6-10 | 3.0 |
| க.பொ.த (சா/த) | 6.3 |
| க.பொ.த (உ/த) மற்றும் அதற்குமேல் | 8.7 |

*மூலம்:* தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

குடித்தொகையின் நியதிகளில் 30 வயதினையும் அதற்கு மேற்பட்ட வயதினையுமுடைய மக்கள், தொடர்பான காலப்பகுதியில் 22,571 நபர்களைக் கொண்ட உயர்ந்த அதிகரிப்பினை பதிவுசெய்ததுடன் அதனைத் தொடர்ந்து 25 இற்கும் 29 இற்குமிடையிலான வயதினைக் கொண்ட நபர்கள் 8,370 அதிகரிப்புக்களுடன் காணப்பட்டனர். இளைஞர்[3] தொழிலின்மை குடித்தொகை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 2,081 கொண்ட அதிகரிப்புடன் மிகக் குறைவாகக் காணப்பட்டது. 2019இன் முதலரைப்பகுதியில் இளைஞர் தொழிலின்மை முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. எனினும், இது 2019 முதலரைப்பகுதியில் 20.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மட்டத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

- **கல்வி மட்டத்தின் நியதிகளில், உயர் தொழிலின்மை வீதம் க.பொ.த. உயர்தரம் மற்றும் உயர் கல்வியடைவுகளில் உள்ள ஆட்களிடையே காணப்பட்டது.** எனினும், இவ்வகையில் தொழிலின்மை வீதம் 2019இன் முதலரைப்பகுதியில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 9.2 சதவீதத்திலிருந்து 8.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கல்வியில் தகைமைபெற்றோரிடையேயான உயர்ந்த தொழிலின்மைக்கு தேர்ச்சியில் பொருத்தப்பாடின்மை மற்றும் அனுபவக் குறைவு, எதிர்பார்க்கப்படுகின்ற உண்மையான ஊதியப் பொதிகளிடையேயான வேறுபாடு மற்றும் குறிப்பிட்ட தொழில் நிபுணத்துவத்தில் பால் வேறுபாடுகளை என்பன பெருமளவிற்கு காரணங்களாக இருக்கக்கூடும். க.பொ.த சாதாரணத்திற்குக் குறைவான தகைமைகளைக் கொண்ட ஆட்களிடையேயான தொழிலின்மை வீதம் 3.2 சதவீதத்திலிருந்து 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 2019இன் முதலரைப்பகுதியில் க.பொ.த (சாதாரண) சித்தியடைந்தவர்களிடையேயான தொழிலின்மை வீதம் முன்னயை ஆண்டின் இதேகாலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 5.0 சதவீதத்திலிருந்து 6.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. தொழிலற்ற குடித்தொகை நியதிகளில், தொடர்பான காலப்பகுதியில் க.பொ.த (சாதாரண) சித்தியடைந்த ஆட்கள் 23,303 இனாலும் க.பொ.த (சாதாரண) இற்கும் குறைவான தகைமையைப் பெற்ற ஆட்கள் 7,702 இனாலும் க.பொ.த (உயர்தரம்) மற்றும் உயர் கல்வி அடைவுமட்டங்களைக் கொண்டவர்கள் 2,018 இனாலும் அதிகரித்திருக்கின்றனர்.


## வெளிநாட்டு தொழில்வாய்ப்பு

- **வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக சென்றவர்களின் எண்ணிக்கை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் 7.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இதற்கு 2019இன் முதலரைப்பகுதியில் தொழிலுக்காக புறப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழச்சியடைந்த வேளையில், தொழிலுக்காக புறப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். 2019இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பிற்காகச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 95,052 ஆக விளங்கியதுடன் இதில் ஆண்களின் புறப்படுகை 59 சதவீதத்திற்கும் பெண்களின் புறப்படுகை 41 சதவீதத்திற்கும் வகைகூறின.

- **2019இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 56 சதவீதத்திற்கு தேர்ச்சியற்ற ஊழியர்களும் வீட்டுப் பணிப்பெண்களும் பிரதிநிதித்துவம் செய்தனர்.**

வரைபடம் 4.7

தேர்ச்சி அடிப்படையில் வெளிநாட்டுத் தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள் (ஆண்டின் முதலரை)




(அ) தற்காலிகமானவை *மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

3 15 - 24 வயதிற்கிடைப்பட்டவர்கள்

தொழில் பெற்றுச்சென்ற வேலையாட்களில் நடுத்தர மட்டம், எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்பானவர்கள், தேர்ச்சி பெற்றவர்கள், ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள், தேர்ச்சி பெறாதவர்கள் மற்றும் வீட்டுப் பணிப்பெண் வகைகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் தொழில்சார் நிபுணத்துவ வகையின் கீழ் புறப்பட்ட வேலையாட்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியில் அதிகரிப்பொன்றைக் காட்டியது. 2019இன் முதலரைப்பகுதியில், புலம்பெயர்ந்த பெண் வேலையாட்களில் கணிசமான சதவீதத்திற்கு அதாவது 77 சதவீதத்திற்கு வீட்டுப் பணிப்பெண்கள் வகைகூறினர். 2019இன் முதலரைப்பகுதியில் வீட்டுப் பணிப்பெண் வகையின் கீழ் புறப்பட்டவர்களின் எண்ணிக்கை 29,678 இனை அடைந்து முன்னயை ஆண்டின் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

## தொழிலாளர் உறவுகள்

- **தனியார் தொழில் துறைகளில் இடம்பெற்ற வேலைநிறுத்தங்களினது எண்ணிக்கை நியதிகளில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்ட போதும், வேலைநிறுத்தங்களின் காரணமாக அதில் ஈடுபட்ட தொழிலாளர்களினதும் இழக்கப்பட்ட மனித நாட்களினதும் நியதிகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.** 2019இன் முதலரைப்பகுதியில் தொழில் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட தரவுகளின்படி, பெருந்தோட்டத் துறையின் வேலை நிறுத்தங்கள் மற்றும் இவ்வேலை நிறுத்தங்களில் ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கை என்பன முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. 2019இன் முதலரைப்பகுதியில் வேலை நிறுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. பெருந்தோட்டத் துறை தவிர்ந்த ஏனைய துறைகளின் நியதிகளில் 2019இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை சிறிதளவால் அதிகரித்தது. எனினும், ஈடுபட்ட வேலையாட்களின் எண்ணிக்கை மற்றும் இழக்கப்பட்ட மனித நாட்கள் என்பன இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. தொழில் திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்ட தரவுகளின்படி, 2019இன் முதலரைப்பகுதியில் தனியார் துறை கைத்தொழில்களில் 15 வேலை நிறுத்தங்கள் பதிவுசெய்யப்பட்ட வேளையில் 5 வேலைநிறுத்தங்கள் பெருந்தோட்டத் துறையிலும் 10 வேலைநிறுத்தங்கள் ஏனைய துறைகளில் பதிவுசெய்யப்பட்டன. பொதுவாக 2019இன் முதலரைப்பகுதியில் இவ்வேலை நிறுத்தங்களில் 6,646 வேலையாட்கள் ஈடுபட்டிருந்தனர். இதில் 26 சதவீதம் பெருந்தோட்ட துறையிலும் 74 சதவீதம் ஏனைய துறைகளிலும் காணப்பட்டது. 2019இன் முதலரைப்பகுதியில் இவ்வேலை நிறுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட மனித நாட்களின் மொத்த எண்ணிக்கை 30,696 நாட்களாகக் காணப்பட்டது. இதில், 50 சதவீதம் பெருந்தோட்டத் துறையிலும் 50 சதவீதம் ஏனைய துறைகளிலும் காணப்பட்டது. இவ்வேலை நிறுத்தங்களுக்குப் புறம்பாக, அரச துறையில் கிடைக்கத்தக்க தரவுகள் சுகாதாரம், சுங்கம், அஞ்சல் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் பல வேலைநிறுத்தங்கள் காணப்பட்டமையினை எடுத்துக்காட்டின. இவை, பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையின் மீதும் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீதும் எதிர்க்கணியமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

- **2019இன் முதலரையாண்டுப் பகுதியில் வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதியினால் (2010 விலைகளில்) அளவிடப்பட்டவாறான தொழிலாளர் உற்பத்தித்திறன் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.494.47 உடன் ஒப்பிடுகையில் வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கான உற்பத்தித்திறன் ரூ.500.91 இற்கு 1.3 சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது.** முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரையாண்டுப் பகுதியில் ஒட்டுமொத்த தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு அனைத்து நடவடிக்கைகளிடையேயும் கூட்டப்பட்ட மொத்த பெறுமதி அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வேளாண்மை நடவடிக்கைகள் இரண்டும் தொழிலாளர் உற்பத்தித்திறனில் நேர்க்கணியமான வளர்ச்சியினைப் பதிவுசெய்த வேளையில் கைத்தொழில் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்ததுடன் பணிகள் துறை மாற்றமின்றிக் காணப்பட்டது. உற்பத்தித்திறன் மட்டங்களின் நியதிகளில், பணிகள் நடவடிக்கைகள் தொழிலாளர் மூலவளங்கள் மிக வினைத்திறன் மிக்க விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமையை எடுத்துக்காட்டி வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.600.09 கொண்ட மிக உயர்ந்த உற்பத்தித்திறனைப் பதிவுசெய்தது. அதனைத் தொடர்ந்து வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.530.80 கொண்ட உற்பத்தி மட்டத்தைப் பதிவுசெய்த கைத்தொழில் துறை அதற்கு அடுத்த இடத்தைப் பெற்றுக்கொண்டது. அண்மையகாலத்தில் அவதானிக்கபட்ட போக்கின் தொடர்ச்சியாக வேளாண்மை நடவடிக்கைகள் மிகக்குறைந்த உற்பத்தித்திறன்

மட்டங்களைப் பதிவுசெய்து 2019இன் முதலரையாண்டுப் பகுதியில் வேலைசெய்யப்பட்ட மணித்தியாலம் ஒன்றிற்கு ரூ.191.61இனைக் கொண்ட உற்பத்தித்திறன் மட்டத்தினைப் பதிவுசெய்தது. எனினும், முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது கணிசமானதொரு முன்னேற்றமாக இருந்ததுடன் வேளாண்மை நடவடிக்கைகளில் கூட்டப்பட்ட மொத்தப் பெறுமதிகளும் தொழில்புரியப்பட்ட மணித்தியாலங்களும் வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணங்களாக அமைந்தன.

## எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள்

### விலைகள்

- **2019இன் எஞ்சிய காலப்பகுதியில் பணவீக்கம் விரும்பத்தக்க பணவீக்க இலக்கான 4-6 சதவீதத்திற்கிடையில் விளங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.** நன்கு நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களுடன் சேர்ந்து முன்னோக்கிய கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளும் சாதகமான உள்நாட்டு வழங்கல் நிலைமைகளும் பொதுவிலை மட்டத்தினை அனுகூலமான மட்டங்களில் பேணுவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும்கூட, அத்தகைய சாதகமான அபிவிருத்திகளுக்கு எதிராக பன்னாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு மற்றும் உள்நாட்டு நாணயத்தின் பெறுமானத் தேய்வு போன்ற பல காரணிகளிலிருந்து விலைகள் மீதான மேல்நோக்கிய அழுத்தங்கள் தோன்றுகின்றன. மேலும், ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பருவகால பாரிய மழை வீழ்ச்சி புதிய உணவு விடயங்களில் குறிப்பாக காய்கறிகள் மற்றும் மீன் என்பனவற்றின் வழங்கல்களில் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும். இது, தளம்பலடையும் உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் அசைவுகளிலிருந்து தோன்றுகின்ற பணவீக்க உருவாக்கம் அதிகரிப்பதற்கு இட்டுச்செல்லக்கூடும்.

- **உணவு விலைகளின் முக்கியமாக அரிசி, காய்கறிகள், பழவர்க்கங்கள், வெங்காயம், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உறுதிப்பாடு நிரம்பல்பக்க தளம்பல்களினால் சவாலுக்குட்படுவதன் காரணமாக உறுதியான மிகைகள் மற்றும் வளங்களில் காணப்படும் பற்றாக்குறைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில் வலுவான வழங்கல் முகாமைத்துவ முறைமையொன்று தேவைப்படுகின்றது.** இவையெல்லாவற்றையும் சேர்த்து பயிர்களின் எதிர்பார்க்கப்படுகின்ற அருந்தல் மட்டங்களுக்கேற்ப அவற்றை வேளாண்மையாளர்கள் உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கும் விதத்தில் பொருத்தமான ஊக்குவிப்புக்களை வழங்கும் பொருட்டு பயிர் உற்பத்திகளில் ஏற்படக்கூடிய பற்றாக்குறைகளை எதிர்வுகூறுகின்ற நேரகாலத்துடன் எச்சரிக்கை விடுகின்ற பொருத்தமான பொறிமுறையொன்றினை நிறுவுவது அவசியமாகும். மேலும், மிகையான பயிர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தின் தலையீடு ஊடாக மிகையான நிரம்பலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும். மேலும், இடையேற்பாட்டாளர்களின் காரணமாகவும் பொருட்களை ஏற்றி இறக்குவதினால் ஏற்படும் விரையங்களினதும் காரணமாக ஏற்படுகின்ற நுகர்வோர் விலைகளுக்கும் உற்பத்தியாளர் விலைகளுக்கும் இடையிலான இடைவெளியினை குறைப்பதற்கு அரச - தனியார் பங்குடமையின் ஊடாக மத்திய போக்குவரத்து முகவராண்மை ஒன்றினை நிறுவமுடியும். விரயங்களைக் குறைப்பதற்காக பொருத்தமான பயிர் களஞ்சியப்படுத்தும் பொறிமுறையொன்றினை நோக்கி நகர்வதற்காக விவசாயிகளுக்கு நிதி உதவிகளை அறிமுகப்படுத்தலாம்.

### தொழிற்படை மற்றும் தொழில்நிலை

- **தேர்ச்சிபெற்ற தொழில்வாய்ப்பினை எதிர்பார்ப்போருக்கும் தொழில்தருநர்களின் தேவைக்குமிடையில் விடாப்பிடியாக வளர்ந்து வருகின்ற பொருத்தப்பாடின்மையானது விரைந்த வேகத்தில் இடம்பெற்று வருகின்ற நான்காவது கைத்தொழில் புரட்சியுடன் மேலும் மோசடையக்கூடும்.** நான்காவது கைத்தொழில் புரட்சியானது செயற்கை முறையிலான நுண்ணறிவு, ரோபோ மயப்படுத்தல், தன்னியக்கத்தன்மை போன்ற புரட்சிகரமான தொழில்நுட்ப கலவையுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இத்தொழில்நுட்பங்கள் அபிவிருத்தியடைவதன் மூலம் பாரம்பரிய வகையிலான தொழில்வாய்ப்புக்கள், தன்னியக்க முறைகளின் மூலம் பதிலீடு செய்யப்படலாம். இத்தோற்றம்பெற்றுவரும் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் எதிர்கால தொழிலின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் விதத்தில் தொழிற்படையினை தயார்படுத்துவது அவசியம் என்பதுடன் பாடவிதானங்களை மீளமைப்புச் செய்வதனூடாக பாடசாலை மட்டங்களிலிருந்து பாட இணைப்புக்களை ஆரம்பித்தல் வேண்டும். மேலும், தற்போதைய தொழிற்படையும்கூட தாக்குப்பிடிப்பதற்கும் அவர்களது தொழில்நிலையினை நிலைத்திருக்கச் செய்வதற்கும் உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்ற மாற்றங்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன் தேர்ச்சியினையும் மாறிக்கொள்ளும் தன்மையினையும் அபிவிருத்தி செய்து கொள்ளுதலும் வேண்டும். மாறாக, மனிதனால் மட்டும் மேற்கொள்ளப்பட வேண்டிய, மருத்துவ நியதிகளில் நோயாளர்களைக் கவனித்தல், முதியோர் பராமரிப்பு மற்றும் சிறுவர் நலக் கவனிப்பு போன்றவற்றிற்கான குறிப்பிட்ட

4

தொழில் வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இலங்கையில் காணப்படும் வயது முதிர்தோர் குடித்தொகைப் பண்பினையும் இத்தகைய தொழில்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகரித்து வரும் எதிர்கால கேள்வியை கருத்திற்கொண்டு இவ்வகைத் தொழில்களில் தேவையான தேர்ச்சிகளுடன் தொழிற்படையினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

- **தொழில் எதிர்பார்ப்பு அதேபோன்று தொழில் உருவாக்கம் என்பனவற்றின் நியதிகளில் மக்களின் மனோபாவத்தினை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.** அதிகரித்த தொழில் பாதுகாப்புக் காரணமாக இளைஞர்களிடையே அரச துறையில் மாத்திரம் தொழில் தேடும்போக்கு உள்ளது. இது குறிப்பிட்டதொரு இளைஞர் வகை சோம்பி இருக்கும் தன்மையினை ஏற்படுத்துவதோடு தொழில், கல்வி அல்லது பயிற்சி என்பன இல்லாத இளைஞர் பிரிவினரை அதிகரிக்கும். மாறாக தொழில்துறை அனுபவத்தை பெறுவதற்காக இளைஞர்கள் தனியார் துறையில் பயிற்சித் திட்டங்களை தேடலாம். இது, அரச துறையில் இணைவதற்கான முன்நிபந்தனையாக விதிக்கப்படலாம். மேலும், இலங்கையின் தொழிலாளர் சந்தையின் பொதுவான விமர்சனம், தேவையான தகுதிகளைக் கொண்ட ஊழியர்கள் தமது அறிவை பொருத்தமான முறையில் பயன்படுத்துதில்லை என்பதாகும். இதற்கு தொழில் தேவைகளுக்கும் கல்விப் பாடத்திட்டத்திற்குமிடையிலான பொருத்தப்பாடின்மை காரணமாக இருக்கலாம். எனவே, தொழில் தேவைகளுக்கேற்ற வகையில் பாடத்திட்டங்களை மாற்றுவது தேவைப்பாடாகும்.

4